## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது / கார்த்திகை 26**

**ந.க.எண் : 7338/2023 / எம்சி. 8 நாள் 12.12.2023**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 14.12.2023 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் -தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது / கார்த்திகை மாதம் 28 ஆம் நாள் (14.12.2023 ) பிற்பகல் 03.00 மணிக்கு மாமன்ற அவசரக் கூட்டம்** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு - கூட்டப்பொருள்கள்

**(ஒப்பம்) ஆ. கல்பனா**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

# நிகழ்ச்சி நிரல்

## பொருளடக்கம்

அ) தமிழ்த்தாய் வாழ்த்து
ஆ) திருக்குறள் வாசித்தல்
இ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி ஏற்றல்
ஈ) மன்ற நடவடிக்கைகள்
உ) தீர்மானத்திற்குரிய பொருள்களை விவாதத்திற்கும் முடிவிற்கும் எடுத்துக் கொள்ளுதல்
ஊ) நாட்டுப் பண்

ஆ) **திருக்குறள்**

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

குறள் - 502

**விளக்கம்**

நல்ல இனத்தின் பண்புகளைப் பெற்று, குற்றங்கள் அணுகாது, தவறுகளை ஒதுக்கி, நாணத்தக்க பழிகளை நீக்கிச் செயல்படும் திறனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர்.

---

இ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22/11/2021 அன்று மத்திய மண்டலம் காந்திபுரத்திலுள்ள மத்திய சிறைச்சாலை வளாகத்தில் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளிஅரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா அமைத்தல் பணிக்கு ரூ.200 கோடி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டதன்படி, தமிழ்நாடு மாநில நிதி அறிக்கை 2023-24-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் உலக தரவாய்ந்த செம்மொழி பூங்கா அமைத்தல் பணிக்கு ரூ.172 கோடி ஒதுக்கப்பட்டது.

அதன்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை (எம்.சி.4) அரசு ஆணை (4டி) எண் 14 நாள். 06.04.2023 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்திலுள்ள மத்திய சிறை சாலையில் 47 ஏக்கர் நிலப்பரப்பில் செம்மொழி பூங்கா, நகர கூட்ட அரங்கு மேடை, நவீன பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல், சூர்யமின்தகடு அமைத்தல் மற்றும் இதர பணிகளுக்கு ரூ.172,21 கோடி நிதிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கான நிதியினை மாநில பட்ஜெட்டில் ரூ.86.00 கோடி பொதுநிதி மற்றும் இதர திட்டத்தின்கீழ் ரூ.86.21 கோடியாகவும் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு நாள்.27.07.2023-அன்று பரிசீலினை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் பகுதியில் செம்மொழி பூங்கா – தாவரவியல் பூங்கா அமைத்தல், சிறிய ரக மின் வாகனங்கள் கொள்முதல் செய்தல். **ந.க.எண்.5753/2022/எம்.டி.5** | **9344.00** | ந.நி .கு.வ துறை நாள். 06.04.23 | முதலாம் அழைப்பு 31.08.2023 | திரு/ள்.ஆர்.ஆர் துளசி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் , ஈரோடு **மதிப்பிட்டை விட (7.15 % அதிகம் )** திரு/ள்.யூ.ஆர்சி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு **மதிப்பிட்டை விட (10.77 % அதிகம் )** | திரு/ள்.ஆர்.ஆர் துளசி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் , ஈரோடு **விலைப்புள்ளி குறைப்பிற்கு பின் மதிப்பிட்டை விட (1.99 % அதிகம்)** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்கள் ந.க.எண்.18484/2023/டி01 நாள்.13.10.2023 அன்று வழங்கப்பட்ட செயல்முறை ஆணையில் மதிப்பீட்டினை விட 1.99 சதவீதம் அதிகமாக அளித்த விலைப்புள்ளியினை ஏற்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீட்டினை விட 1.99 சதவீதம் அதிகமாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் இதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.5753/2022/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 300 நாள் 14.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22/11/2021 அன்று மத்திய மண்டலம் காந்திபுரத்திலுள்ள மத்திய சிறைச்சாலை வளாகத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்டஅரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்டசெம்மொழிப்பூங்கா அமைத்தல் பணிக்கு ரூ.200 கோடி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டதன்படி, தமிழ்நாடு மாநில நிதி அறிக்கை 2023-24-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் உலக தரவாய்ந்த செம்மொழி பூங்கா அமைத்தல் பணிக்கு ரூ.172 கோடி ஒதுக்கப்பட்டது.

அதன்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை (எம்.சி.4) அரசு ஆணை (4டி) எண் 14 நாள். 06.04.2023 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திலுள்ள மத்திய சிறை சாலையில் 47 ஏக்கர் நிலப்பரப்பில் செம்மொழி பூங்கா ,நகர கூட்ட அரங்கு மேடை, நவீன பலஅடுக்குவாகனநிறுத்துமிடம் அமைத்தல் ,சூர்யமின்தகுடு அமைத்தல் மற்றும் இதர பணிகளுக்கு ரூ.172,21 கோடி நிதிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கான நிதியினை மாநில பட்ஜெட்டில் ரூ.86.00 கோடி, பொதுநிதி மற்றும் இதர திட்டத்தின்கீழ் ரூ.86.21 கோடியாகவும் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு நாள் 12.09.,2023 -அன்று பரிசீலினை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை கோடியில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி - உக்கடம் கழிவுநீர் சத்திகரிப்பு நிலையத்திலிருந்து செம்மொழி பூங்காவிற்கு குழாய் அமைத்தல். **ந.க.எண்.5753/2022/எம்.டி.5** | 7.83 | ந.நி .கு.வ .துறை நாள். 06.04.23 | முதலாம் அழைப்பு 31.08.23 | 1).தி/ள்.சன்மதி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு **மதிப்பிட்டை விட (4.37 % அதிகம் )** | தி/ள்.சன்மதி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு **விலைப்புள்ளி குறைப்பிற்கு பின் மதிப்பிட்டினை விட (0.004 % குறைவு )** |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட – செம்மொழிப் பூங்கா பல்நோக்கு மாநாட்டு மையம் கட்டுதல். **ந.க.எண். 5753/2022/ எம்.டி.5** | 25.56 | ந.நி .கு.வ துறை நாள். 06.04.23 | முதலாம் அழைப்பு 31.08.23 | 1).தி/ள்.சன்மதி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு **மதிப்பிட்டை விட (0.50 % அதிகம் )** | தி/ள்.சன்மதி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஈரோடு **விலைப்புள்ளி குறைப்பிற்கு பின் மதிப்பிட்டை விட (0.004 % குறைவு )** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட மத்திய சிறைச்சாலை வளாகத்தில் செம்மொழி பூங்கா மற்றும் கலையரங்கம் (Convention Centre) மற்றும் பல அடுக்கு வாகனம் நிறுத்துமிடங்கள் (Multilevel Car Parking) அமைத்தல் பணி **ந.க.எண்.5753/2022/எம்டி5** | 6.38 | ந.நி.இ அவர்களின் செ.முறை ஆணை எண்.ஜி.டி (4டி) எண்.14 நாள். 06.04.23 | முதலாம் அழைப்பு 02.06.23 | **1). தி/ள். லேண்ட் டெக்** & **ஏ.இ.பி.சி பிரைவேட் லிமிடெட், சென்னை.**<br><br>2).**தி/ள்..கேபிடல் இன்ஜினியரிங் கன்சல்டன்சி சென்னை பிரைவேட் லிமிடெட்,** | **தி/ள். லேண்ட் டெக்** & **ஏ.இ.பி.சி பிரைவேட் லிமிடெட், சென்னை** (4,47,22,00,00) **விலை குறைப்பிற்கு (4,47,10,00,000)** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு பெறப்பட்ட நிர்வாக அனுமதிக்கும் மற்றும் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனை மாமன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம் ந.க.எண்.5753/2022/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 301 நாள் 14.12.2023**

பதிவு செய்யப்பட்டது.

---